**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05–ம் நாள் வியாழக்கிழமை வாதிகள் தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | **ஆதிஸ்வரி** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**05.02.2026** **OS.7/2023** **வா.சா.3 ஆதிஸ்வரி**

<u>**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை**</u>:

நான் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல. வாதி தரப்பு 3 ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வாதிக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யவேண்டி பிராத்திக்கின்றேன்.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன் தற்போது தொலைதுாரக்கல்வியில் B.Com., படித்து வருகிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு யார் தகவல் சொன்னது என்றால் இவ்வழக்கின் வாதிகளான ராஜாஜி, ஈஸ்வரன், ராஜபாண்டி ஆகியோர் தகவல் சொன்னார்கள். எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் என் தகப்பனாருடன் சேர்த்து நான்கு நபர்கள் முறையே நாராயணன் (என் தகப்பனார்), அமிர்தம், மூர்த்தி, பரமசிவம் ஆகியோர் ஆவார்கள்.

2) அமிர்தம் எனது அத்தை என்றால் சரிதான். மேற்படி அமிர்தத்தின் கணவர் பெயர் என்னவென்றால் ராஜாஜி ஆகும். மேற்படி ராஜாஜி என்பவர் இவ்வழக்கின் 2ம் வாதி என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிக்க சமூக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வந்ததா என்றால் இல்லை ராஜாஜி அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் ராஜாஜி என்ற பெயர் ராசாத்தி என

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.05 17:10:33 +0530

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் பிரதிவாதியின் பெயர் என்னவென்றால் செல்வி ஆகும். செல்வியை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை.

3) நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வீட்டின் கதவு எண் என்னவென்றால் கதவு எண். 133 ஆகும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதியை எனக்கு தெரியும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதிகள் எத்தனை இலக்க சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் 2 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளனர். தாவா சொத்துக்கள் நஞ்சை நிலமா, புஞ்சை நிலமா என்றால் நஞ்சை நிலம் ஒன்று புஞ்சை நிலம் ஒன்று ஆகும்.

4) எந்த இலக்க சொத்து புஞ்சை நிலம் எந்த இலக்க சொத்து நஞ்சை நிலம் என்றால் புல எண்.367/14 நஞ்சை நிலம் ஆகும். புல எண். 209/2 புஞ்சை நிலம் ஆகும். எங்கள் கிராமத்தில் பொதுவாக ஒவ்வொரு நிலத்திற்கும் சர்வே எண் தவிர ஒவ்வொரு பெயர் சொல்லி குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை என்ன பெயர் சொல்லி அழைப்பார்கள் என்றால் புஞ்சை நிலத்தை கொக்கலாம் பொட்டல் என்று அழைப்பார்கள் நஞ்சை நிலத்தை என்னவென்று அழைப்பார்கள் என எனக்கு தெரியாது.

5) தாவா 2ம் இலக்க சொத்தான சர்வே எண். 367/14 ன் விஸ்திரனம் என்னவென்றால் 15 சென்டிற்குள் இருக்கும். தாவா 2 இலக்க சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாதிகளின் தகப்பனார் ராமுத்தேவர் இறந்த பின்னீடு வாதிகள் தாவா சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலையில் மேற்படி வாதிகளின் தகப்பனார் எந்த தேதியில் இறந்தார் என்றால் இறந்த தேதி தெரியாது. ராமுத்தேவர் இறந்து சுமார் எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் சுமார் 15 வருடங்களுக்கு மேல் இருக்கும்.

6) தாவா 2 இலக்க சொத்துக்களின் நான்குமால் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தாவா 2ம் இலக்க சொத்தான சர்வே எண். 367/14 ன் தெற்கே யார் உள்ளார் என்றால் ஆதிமூலம் உள்ளார். மேற்படி ஆதிமூலத்தின் தந்தை பெயர் என்னவென்றால் சாட்சி முதலில் வெள்ளைக்கண்ணு என குறிப்பிட்டுவிட்டு தற்போது தானாக மேற்படி ஆதிமூலத்தின் தகப்பனார் பெயர் தெரியாது என குறிப்பிடுகிறார். தாவா 2ம் இலக்க சொத்தான 367/14 ன் மேற்கே யார் உள்ளார் என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் வாய்க்கால் உள்ளது. மேற்படி வாய்க்காலுக்கு மேற்கே யார் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.05 17:10:41 +0530

7) தாவா 2ம் இலக்க சொத்தான புல எண். 367/14 க்கு வடக்கே யார் உள்ளது என்றால் வடக்கேயும் வாய்க்கால் தான் உள்ளது. மேற்படி வாய்க்கால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்கிறது. மேற்படி வாய்க்காலுக்கு வடக்கே யார் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா 2ம் இலக்க புல எண். 367/14 க்கு கிழக்கே யார் உள்ளது என்றால் ஒருவரின் வயல் உள்ளது அதில் அல்லிநகரத்திற்கு செல்லும் வரப்பு பாதை உள்ளது. மேற்படி வரப்பு பாதைக்கு மேற்கே என்ன உள்ளது என்றால் வாய்க்கால் உள்ளது. அந்த வாய்க்கால் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி செல்கிறது என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்கிறது.

8) தாவா சொத்திற்கு கிழக்கே யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா 2ம் இலக்க சொத்தில் தற்போது யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் தற்போது முற்செடிகள் உள்ளது. எத்தனை ஆண்டுகளாக தாவா 2ம் இலக்க சொத்து முற்செடிகளாக உள்ளது என்றால் 3 ஆண்டு காலமாக முற்செடிகளாக உள்ளது. தாவா சொத்திற்கு அருகே எனக்கு இடம் உள்ளதா என்றால் இடம் உள்ளது.

9) எனக்கு சொந்தமான இடத்தின் சர்வே எண் என்னவென்றால் 421 ஆகும். அதன் உட்பிரிவு என்னவென்றால் 421/5 ஆகும். அந்த சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் எனது பெயரில் தான் உள்ளது. எனது சொத்திற்கான பட்டா எண் என்னவென்றால் பட்டா எண் 3500க்கு மேல் இருக்கும். தாவா 2ம் இலக்க சொத்திற்கு அருகாமையில் எனக்கு சொத்து உள்ளது என்ற விவரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் ஏன் சொல்லவில்லை என்றால் எனக்கு சொந்தமான சொத்து அருகில் இல்லை 4, 5 நிலங்கள் தாண்டியுள்ளது.

10) தாவா 1ம் இலக்க சொத்தான புல எண். 209/2 க்கு மேற்கே யார் உள்ளது என்றால் பிச்சை என்பவர் உள்ளார். மேற்படி பிச்சை என்பவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை காலமாகிவிட்டார். தாவா 1ம் இலக்க சொத்தான புல எண். 209/2 க்கு கிழக்கே யார் உள்ளது என்றால் வீரப்ப செட்டியார் உள்ளார். மேற்படி வீரப்பசெட்டியாரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் அவருடைய பெயர் எனக்கு தெரியாது. அவர் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் காரைக்குடியைச் சேர்ந்தவர் ஆவார்.

11) ராஜாஜிக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் பிள்ளைகள் எதுவும் கிடையாது. எனது அத்தை அமிர்தம் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்திற்கு விவரம் சொன்னது 2ம் வாதி ராஜாஜி என்றால் சரிதான். தாவா சொத்துக்களை குறித்து எனக்கு எதுவும் தெரியாது

R VENKADESH PRASANTH
Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.05 17:10:50 +0530

என்றாலும் 2ம் வாதி எனது அத்தையின் கணவர் என்பதால் அவர் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

R VENKADESH PRASANTH

Digitally signed by R VENKADESH PRASANTH
Date: 2026.02.05 17:10:56 +0530

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam